**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் தலைமை நிர்வாகம்.**
Annai poopathi Tamilsk Kultursenter sentralstyre
Annai poopathi Tamil Cultural Centre Central committee

30.11.2023

வணக்கம்!

**அன்பார்ந்த அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட றொம்மன் வளாக பெற்றோர்களே,**

**அங்கத்தவர்களுக்கான விளக்கக் கூட்டம் ஒன்றை அன்னை பூபதி தமிழ் கலைக்கூட தலைமை நிருவாகம் சனி 02.12.2023 மணி 09:45 ஏற்பாடு செய்துள்ளது இந்த வேளையில், எமது வளாகத்தின் செயற்பாடுகளை குழப்பும் கபட நோக்கோடு சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடும் நபர்களின் பின்புலம் தெரியாமல் எவ்வித அடிப்படையுமற்ற போலிப் பரப்புரைகளுக்கு பலியாகாது அங்கத்தவர்களைப் பொறுப்போடும் நிதானத்துடனும் நடந்து கொள்ளுமாறு பணிவன்போடு வேண்டுகிறோம்.**

நாம் ஏற்கனவே திட்டமிட்டது போன்று பெற்றோர்களுக்கான தகவற் கூட்டம் இடம்பெறும். இத்தகவற் கூட்டம் தொடர்பான நிலைப்பாட்டை தங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம்.

பெற்றோர் கூட்டத்தை குழப்பும் கபட நோக்கோடு சிலர் வேண்டுமென்றே விதி மீறல்களை மேற்கொண்டு வரம்பிற்கு மீறி தாம் ஒரு கூட்டத்தை நடாத்துவதாக சமூக வலைத்தளங்களில் அறிவித்துள்ளார்கள். **இது ஒரு தன்னிச்சையான செயற்பாடாகும்.**

இச் சிறிய குழுவினர் பெற்றோர்களுக்கு சரியான தகவல் செல்வதை தடுத்து நிறுத்தும் நோக்கோடு தமது செயற்பாடுகளுக்கு நியாயம் கற்பிக்க விளைகின்றனர். எமது நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்து கொள்ளும் இச் சிறு குழுவினரின் நடவடிக்கை வருத்தத்திற்குரியது.

யாப்பு விதிகளுக்கு அமைவாக பிரத்தியேக ஆண்டுக்கூட்டம் றொம்மன் வளாகத்தில் நடைபெறுவதானால், அதற்கு அங்கத்தினரின் மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர் இக் கோரிக்கையை நிறுவனத்திடம் முன்வைத்திருத்தல் அவசியம். 23.11.2023 அன்று எமக்கு மேலதிக ஆண்டுக் கூட்டத்தைப் நடாத்தும் வண்ணம் தனியொருவரால் மின்னஞ்சல் அனுப்பி வைக்கப்பட்டது. அம்மின்னஞ்சலில் ஆண்டுக்கூட்டத்தைக் கூட்டுவதற்காக பெற்றோர்கள் தனக்கு ஒப்புதல் தந்துள்ளார்கள் என்று

கூறப்பட்டிருந்தது. ஆனால் அதற்கான உத்தியோகபூர்வமான ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. பிரத்தியேக ஆண்டுக் கூட்டத்தை நடாத்துவதாயின் அதற்கும் முறையான கோரிக்கை முன்வைக்கப்பட வேண்டும்.

எமது நிறுவனத்தின் சட்ட வல்லுனர்களின் ஆலோசனையைப் பெற்று மின்னஞ்சல் அனுப்பிய தனிநபருக்கு, ஆண்டுக் கூட்டம் நடாத்துவதற்கான நடைமுறைகளை இன்று காலை அலுவலக ரீதியாக அறிவித்துள்ளோம். அதன் பிரதி இங்கே இணைக்கப்பட்டுளளது.:

*Svar brev til krav om ekstraordinært årsmøte.*

*Hei*

*Vi har mottatt brevet ditt datert 23.11.2023 angående kravet om et ekstraordinært årsmøte. Vi bemerker at det ikke følger med dokumentasjon som viser at kravet kommer fra minimum 1/3 av Lokallagets stemmeberettigede medlemmer.*

*I henhold til § 13 d) for et ekstraordinært årsmøte må skriftlig krav komme fra minst 1/3 av Lokallagets stemmeberettigede medlemmer. Hvert enkelt medlem som krever dette, må skriftlig meddele det til styret. I tillegg må kravet fra medlemmene klart indikere hva som ønskes behandlet. Flere medlemmer kan også signere det samme brevet, og det skal tydelig fremgå medlemmets familienummer, navn, underskrift, og dato. Styret vil deretter sjekke om kravene samsvarer med 1/3 av medlemmene som faktisk har oppfylt sine medlemsforpliktelser og som er tellende medlemmer. Hvis du mener at du har krav fra 1/3 av medlemmene, ber vi deg vennligst sende dokumentasjon, og styret vil nøye vurdere denne.*

*Samtidig ønsker vi å informere deg om at det foreldremøtet du refererer til, er ugyldig. Det var et informasjonsmøte for foreldre i Rommen, arrangert av Rommen styre sammen med Annai sentral, men det ble avlyst på grunn av ordensforstyrrelser fra blant annet deg. Annai Rommen har informert alle foreldre i Rommen om at det møtet ble avlyst.*

*Med vennlig hilsen,*

*Annai sentralstyre*

**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் தலைமை நிர்வாகம்.**
Annai poopathi Tamilsk Kultursenter sentralstyre
Annai poopathi Tamil Cultural Centre Central committee

*நாம் ஏற்கனவே அறியத்தந்தது போன்று எதிர்வரும் 02.12.23 சனியன்று பெற்றோர்களுக்கான தகவற் கூட்டம் இடம்பெறும். இக்கூட்டமானது நிறுவன நடைமுறைகளுக்கு இசைவாகவும் ஏற்கனவே திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலிற்கும் சட்ட விதிகளுக்கும் அமைவாக இடம் பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.*

*பலரது கடின உழைப்பில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு அவப் பெயர் ஏற்படுத்தும் நோக்கில் தவறான தகவல்கள் சமூக வலைத்தளங்களில் வேண்டுமென்றே பரப்பப்படுவதால் எமது நிலைப்பாடு தொடர்பான தகவல்களை பெற்றோர்களாகிய உங்களுக்குத் தருவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.*

*நிறைவாக எமது கலைக் கூடத்தின் பெற்றார் சார்பாக கூட்டங்கள் ஒழுங்குபடுத்தப்படுவதாக பொதுவெளியில் போலியான பரப்புரை செய்யும் சில குழப்பவாதிகள் எமது கலைக்கூடத்தின் எதுவித அங்கீகாரமும் இன்றி வேறு கூட்டத்தை நடாத்தப் போவதாக அறிவித்துள்ளனர்.*

***இவ்வாறான கூட்டங்களுக்கும் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்திற்கும் எதுவித தொடர்போ அங்கீகாரமோ பொறுப்போ கிடையாது என்பதை அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.*** *இவ்வாறான சட்டத்திற்கு புறம்பான கூட்டங்கள் எமது நிறுவனத்திற்கு எதுவிதமா தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை.*

*நோர்வே நாட்டு சட்ட விதிகளுக்கும் யாப்புவிதிகளுக்கும் இணங்க எமது கலைக் கூடம் நேர்த்தியாக இயங்கிவருகிறது என்பதை எமது பெற்றோருக்கு நேர்மையுடன் அறியத்தருகிறோம்.*

**«தமிழ் எங்கள் அடையாளம்»**

*நன்றி.*

தலைமை நிருவாகம்

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்